★ "நிபந்தனை எதுவுமின்றி புலிகளுடன் பேசுக"

## அரசிடம் வேண்டுகோள்

(லண்டன்)

தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சிறிலங்கா அரசு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தேசிய உள்நாட்டு உத்தியோகத்தர்களின் அமைப்பு என்ற மனித உரிமைகள் அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 00 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 23 இதழ் 171
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7 — 8 — 1993

நாடாளுமன்றத்தில்

## யுத்தம் குறித்து ஆராய நேரம் ஒதுக்கவேண்டும்

(கொழும்பு)

முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான வழி வகைகளைப்பற்றி ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தில் ஒரு நாளை முழுதாக ஒதுக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் எம்.பிக்கள் பலர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

● வவுனியாவின் வடபகுதியில் மற்றொரு

# இராணுவ நடவடிக்கைக்கு அரசபடையினர் முஸ்தீபு!

(வவுனியா)

வவுனியாவின் வடபகுதியில் இராணுவ நடவடிக்கையொன்றினை மேற்கொள்ளும் முஸ்தீபு நடவடிக்கைகளில் அரசபடையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவின் வடபகுதியில் தமது கட்டுப்பாட்டு எல்லைப் பகுதியை விஸ்தரிக்கும் நோக்குடன் இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிட்டு வருகின்றனர். இதற்கான ஏற்பாடுகள் பெருமளவில் நடைபெற்று வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேவேளை வவுனியாவிலுள்ள பல வர்த்தகர்களிடமிருந்து இராணுவத்தினர் லொறிகளை எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## ஐ. தே. கட்சி ஜனாதிபதி வேட்பாளராக டி.பி.

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க போட்டியிடுவார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை ராஜாங்க அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இத்தகவலைத் தெரிவித்தார்.

பேருவளை ஐ. தே. கட்சியின் மத்திய அமைப்பு கூட்டத்தில் அண்மையில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பா

## படகுசேவை இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுசேவை இன்று சனிக்கிழமை நடைபெற மாட்டாது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

## இராணுவ குற்றவாளிகளை விசாரிக்க விசேட குழு

(கொழும்பு)

இராணுவத்தில் இடம்பெறும் சட்ட விரோத நடவடிக்கைகளை விசாரணை செய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவப்படையை ஒழுக்கம் மிக்க ஒரு படையாக உருவாக்க தாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் அவர் கூறினார்.

ஊழல், மோசடி, கடத்தல், ஒழுக்கீனம், ஆகிய சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக இராணுவ பொலிஸாருக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இராணுவத்தில் உட்பேராட்டம் எதுவும் கிடையாது. ஆனாலும் 90 ஆயிரம் பேர் கொண்ட இராணுவ படையில் அதிருப்தியாளர்கள் இருக்கவே செய்கிறார்கள் என்றும் அவர் கூறினார். (ரி)

## கொழும்பில் தமிழ் இளைஞர் கைது தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பில் தொடர்ந்தும் தமிழ் இளைஞர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொட்டாஞ்சேனை புறக்கோட்டை, கிராண்ட்பாஸ் பகுதிகளில் உள்ள லொட்

(4 ம் பக்கம் பார்க்க)

அரச அதிகாரி யாழ். வருகை

## "விடுதலை கிடைக்காவிட்டால் உண்ணாவிரதம் தொடரும்"

### கைதிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது நீராகாரம் அருந்தி உண்ணாவிரதமிருக்கும் சிங்கள யுத்தக்கைதிகள் தற்போதும் தமக்கு விடுதலை கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக புலிகளின் குரல் வானொலிக்கு தெரிவித்துள்ளனர்.

கட்டுப்படை தலைமையக

(4-ம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் தேர்தலில் நாடாளுமன்றத்திற்கு 250எம்.பிக்கள் தெரிவாவர்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு மொத்தம் 250 எம். பிக்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இப்போதுள்ள எம். பிக்களின் தொகை 225 ஆகும்.

கூடுதலாக 25 எம் பிக்களைத் தெரிவு செய்வதற்கு ஏற்றவிதமாக அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்

(4-ம் பக்கம் பார்க்க)

9 அகதிமுகாம்களுக்கு

## கிழக்கில் மூடு விழா

(மட்டுநகர்)

மட்டக்களப்பிலுள்ள ஒன்பது அகதிமுகாம்கள் சிறிலங்கா அரசினால் மூடப்பட்டுள்ளன. அம்முகாம்களிலிருந்த 1,41 குடும்பங்கள் அவர்களது விருப்பமெதுவுமின்றி எவ்வித பாதுகாப்புகளுமற்ற சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இன்னும் 11 முகாம்கள் தற்போது மட்டக்களப்பில் இயங்கி வருகின்றன. ஒன்பது அகதிமுகாம்களிலிருந்து சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டவர்களுக்கு எதுவித வதிவிட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நிலைமை பற்றி அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தற்போதைய நிலைபற்றி விபரமான அடிப்படை அறிக்கை ஒன்றை உடன் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலகம்

4-ம் பக்கம் பார்க்க

## 5000 பரல் மண்ணெண்ணை யாழ். அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு மாதம் 5,000 பரல் மண்ணெண்ணை அனுப்பி வைப்பதாக சிறிலங்கா அரசு கூறியுள்ள போதும் இதுவரை அந்தத் தொகை பரல்கள் அனுப்பப்படவில்லையென யாழ். செயலக செய்திக்குறிப்பை மேற்கோள்காட்டி புலிகளின் குரல் தெரிவித்தது.

இதனால் யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணை பற்றாக்குறை

(4-ம் பக்கம் பார்க்க)

## பம்பலப்பிட்டி கோயில் குண்டுவெடிப்பு; மூவர் கைது

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள கதிரேசன் கோவிலில் கடந்த திங்கள் இரவும் செவ்வாய் காலையும் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புச் சம்பந்தமாக மூவரை குற்றப்புலனாய்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூபா 6/-. வேம்பம் பழம் காய்ந்த கோது கிலோ ரூபா. 2/- மில்க் வைற்.
(எ- 3311)

### புத்தகங்கள் விற்பனை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இந்திய நாவல்கள், ஆசெநெறிகள், ஆங்கிலதமிழ் அகராதிகள் மற்றும் டிக்செனெறி) ஸ்ரீகாந்தா புத்தகசாலை, நல்லூர்.
(ஏ-3277)

### O/L கணிதம் 93

Distinction, Credit பெறு பேறடைய (முன்னோடிப் பரீட்சையிலும்) வினா விடைகள் B. Sc (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.
(கி-387)

### விற்பனைக்கு

நல்லை ஆதீனத்தில் பாலாஜி சமயப் புத்தகங்கள், சிறுவர்களுக்கான புத்தகங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம்.
(ஏ-3291)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கி-374)

### கல்வி

G. C. E. (O/L) கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சோமசுந்தராவீதி, சுண்டுக்குளி.
(கி-392)

### பரதநாட்டியம்
### (அழகியற் கல்வி)

G. C. E. சாதாரண/ உயர்தர பரீட்சைக்கு தோற்றுபவர்கட்கேற்ற வகையில் கற்பித்தலில் பல வருட அனுபவமிக்க ஆசிரிய ஆலோசகர் நாட்டியக் கலைமணி திருமதி யசோதரா விவேகானந்தன் அவர்களால் எழுதப்பெற்றது. சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும் சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், புத்தகசாலை, சாகச்சேரி.
கி-391

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## அ.இ.க.மு., காங்கிரஸ் மோதல்

(சென்னை)

அ. இ. மு. க. தொண்டர்களும் இந்திரா காங்கிரஸ் தொண்டர்களுக்கு மிடையில் சாதிமான் அனம் என்றஇடத்தில்நேற்றுமோதல் ஏற்பட்டது.

இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் குமரி அனந்தன் உட்பட 4 சட்டமன்ற உறுப்பினர்களும் சுமார் 300 க்கும் மேற்பட்ட தொண்டர்களும் இந்த மோதலின்போது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். (ப)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவகால நிகழ்ச்சியில் இன்று நாவலர் மணி மண்டப முன்றலில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில், நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

நாதஸ்வரம்: எஸ். எஸ். சிதம்பரநாதன், கே. கணேசன், பி. ரஜீந்திரன்.

தவில்: எஸ். சொர்ணலிங்கம், எஸ். வீராச்சாமி பி. ரவீந்திரன். (162

## நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

யாழ் கரவெட்டி செஞ்சிலுவைச் சங்கத்தின் தையல் பயிற்சியை முடித்த மாணவிகளாகிய நாம், எமது தையல் பயிற்சி ஆசிரியை செல்வி பவானி ஆழ்வாப்பிள்ளைக்கு தன்னலம் கருதா சேவையாற்றி, எம்மை இத்துறையில் சிறந்த பயிற்சியாளர்களாக உருவாக்கித்தந்தமைக்கு உளம்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், யாழ் கரவெட்டி செஞ்சிலுவைச் சங்கத்திற்கும், நன்றியைக் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றோம்.

நட்புறவின் சின்னமாக, பணி தொடரட்டும்.

93ம் ஆண்டு தையல் பயிற்சி மாணவிகள்

கரவெட்டி,
07-08-93
(எ- 3318)

## வேலை வாய்ப்பு

### உதவி உற்பத்தி முகாமையாளர்
### (Assistant Production Manager)

மேற்படி வெற்றிடத்துக்கு பின்வரும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்களை 17 - 08 - 1993 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தகுதி:

வயது: ஆகக்கூடியது 30 - பெண்

கல்வித்தகமை: ஆகக் குறைந்தது க. பொ. த. (உ/த) சித்தி (தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்க வேண்டும்)
பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் அல்லது தாவரவியல் ஆகிய பாடங்களை பயின்ற பட்டதாரி ஆயின் அது மேலதிக தகைமையாக கருதப்படும்.

வேதனம்: அனுபவம், தகுதிகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

நிர்வாக முகாமையாளர்
**Taste Line Indusries**
**(Pvt) Ltd.**
No. 14, Seenier Lane
Jaffna.
(எ 3323)

## ENGLISH TEACHERS FOR KILINOCHCHI DISTRICT

Applications are sought from retired officers and retired teachers for re-employment for English teaching in secondary schools in the Kilinochchi District. The last drawn salary (with the necessary conversions) will be paid. The applicants should satisfy at least one of the following requirements:

1. A Bachelor's degree from a recognized University with English as a subject.

   OR

2. A Bachelor's degree from a recognized University in the English medium.

   OR

3. A pass in English in the G. C. E. (Advanced Level) with passes in two other subjects.

   OR

4. Training in English teaching in a recognized teacher's training college.

Applicant will have to prepare their own applications giving their Bio data and all other relevant particulars and send to reach Head, English Language Teaching Centre, University of Jaffna, Jaffna on or before 20th August 1993. Selection by written Examination and Interview

**REGISTRAR**

Univresity of Jaffna.
Jaffna.
(A 3320)

## மாவீரர் ஞாபகார்த்த சமூக கூடங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் அறவழிப் போராட்டக் குழுவினால் சரசாலை, கெருடாவில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள சமூக கூடங்களின் திறப்பு விழா நாளை 8-ம் (4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படும்.

1. பயிராக்கவியல்/ விவசாய உயிரியல்/ விவசாயஇரசாயனவியல்/ விவசாயப் பொருளியல்/ விவசாயப் பொறியியல்/ மிருக விஞ்ஞானப் பேராசிரியர்.

2. விவசாயஉயிரியலில்/ மிருக விஞ்ஞானத்தில்/ விவசாய பொருளியலில்/ விவசாயப் பொறியியலில்/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ விரிவுரையாளர் (தகுதி காண்)/ உதவி விரிவுரையாளர் (தகுதி காண்)

3. பயிராக்கவியலில்/ விவசாய உயிரியலில்/ மிருக விஞ்ஞானத்தில்/ செய்முறை காட்டுநர்.

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென தலைவராலும் பீடத்தலைவராலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண் ஒருவருக்கு விரிவுரையாளர் தகுதிகாண்) என்ற பதவிப் பெயரை அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் ரூபா 5850- 10X260 - 8450/- மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத் திட்டத்தில் அவரை வைக்கவும் முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) டன் சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையின்றி விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இச்சம்பள அளவுத்திட்டம் 1994-01-01இல் இருந்தே அமுல்படுத்தப்படும்.

### சம்பள அளவுத் திட்டம்

பேராசிரியர்
ரூபா 15860 - 6X390- 18,200/-
(மாதமொன்றிற்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
- ரூபா 12480 - 8X325 - 15080/-
(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II
- ரூபா 10400 - 5X325 - 12025/-
(மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (தகுதி காண்)
- ரூபா 5850 - 10 X 260 - 8450/-
(மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர் (தகுதி காண்)
- ரூபா 5070/-
மாதமொன்றுக்கு
(நிலையானது)

தற்காலிகச் செய்முறை காட்டுநர்
- ரூபா 4225/-
மாதமொன்றுக்கு
(நிலையானது)

குறிப்பு:

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551 ஆம் இலக்க 1993 டிசம்பர் 28 ஆம் தேதிய சுற்று நிருபத்திற்கு ஏற்ப மேற்குறித்த சம்பள அளவுத் திட்டங்கள் 1994 ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.

2. இத்துடன் 1994 டிசெம்பர் 31 தேதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25% சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு தேதி: 1993-10 29 இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு தேதி: 1993-09-10.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்ப படிவங்களையும் விபரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துக்கும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபன, கல் நியதிச்சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானபடியில் வைக்கப்படுவார்.

குறிப்பு:-

ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் அவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
1993-07-30.
(ஏ-3316)

### மணிவாக்கு

கீழே விழாதிருப்பது நமக்குப் பெரிய பெருமையல்ல. ஆனால் விழுந்தபோதெல்லாம் எழுந்திருப்பதே பெருமைக்கு உரியது.

— கன்பூஷியஸ்

## நமது நோக்கு

### தவித்த முயலா, தமிழன் நிலை?

தங்கப் பதக்கப் பரிசில் பெறச் சென்ற மாணவன் கொழும்பில் பட்ட அவதி பற்றி, எமது பத்திரிகையில் விரிவான செய்தி வந்துள்ளது.

தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படும் நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாகிவிட்டன.

தமிழர்கள் எந்தவித உரிமைகளும் அற்றவர்களாக, அடிமைகளைவிடக் கேவலமாகக் கருதப்படுகின்றார்கள் என்பதற்கு, இந்தக் கைது விவகாரம் ஓர் உதாரணம்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

"எல்லோரும் சேர்ந்து பாடுங்கள்; எல்லோரும் சேர்ந்து ஆடுங்கள்!" என்று உதட்டளவில் ஒற்றுமைக் கீதம் பாடும் அரசின் உண்மைச் சொரூபத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு!

மலையகத் தமிழர்களும் கண்டபடி கைது செய்யப்படுகின்றார்கள்; சிறையில் வாடுகிறார்கள்.

அமைச்சர்கள் தொண்டமான், செல்லச்சாமி போன்றோர், ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ் உயர் அதிகாரிகளை அடிக்கடி கண்டு பேசினார்கள்.

கொடுத்த வாக்குறுதிகள், உருவாக்கிய நடைமுறைகள், வழமைபோல மீறப்பட்டுவிட்டன!

நாடாளுமன்றத்திலும் தமிழ் உறுப்பினர்களால் இவ்விவகாரம் பற்றிக் குரல் எழுப்பப்பட்டது. சிவில் உடையில் வரும் கொள்ளையர்கள் சி.ஐ.டி. எனக் கூறி, அப்பாவித் தமிழர்களை மிரட்டிக் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவங்களும் அங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

எனினும் கைது செய்யும் நிகழ்ச்சிகள் கொழும்பில் மாத்திரமல்லாது, ஏனைய இடங்களிலும் நடைபெறுவது நாளாந்த நிகழ்ச்சிகளாகிவிட்டன.

கைது செய்யப்படுபவர்களை விடுவிப்பதற்கு மக்கள் அலைந்து திரிவதைவிட, பல்வேறு ரூபங்களில் செய்யப்படும் 'தானங்கள்' பற்றியும் கண்ணீர்க் கதைகள் வந்த வண்ணம் உள்ளன.

தவித்த முயலாகிவிட்ட தமிழர்களிடம் இருந்து தாராளமாகப் பணம் கறக்கப்படுகின்றது!

இத்தகைய இழிநிலையிலா எமது எதிர்காலச் சந்ததியினர் தொடர்ந்தும் வாழவேண்டும்?

எமது சமூகம் தன்னைத் தான் பாதுகாக்க மேலும் தீவிரமாகச் செயற்பட வேண்டும் என்ற சிந்தனை தான் வேகமாகப் பரவுகின்றது!

# இலங்கையின் படை பலம்

இலங்கை இராணுவ, கடற்படை, விமானப்படை, விசேட அதிரடிப்படையின் தொகையும், அவை பயன்படுத்தும் யுத்த தளபாட வகைகளும் வருமாறு:

## இராணுவம்

ஆளணி! 70,000. தொகுதி: 3 பிரிவுகள், 30 காலாட் படையணி, ஒரு கமாண்டோ, ஒரு எஸ். எவ். படைப்பிரிவு, ஒரு கவசப் படைப் பிரிவு, இரு ஆயுத ரெஜி படைப் பிரிவு, 4 தரைவெளி பீரங்கி படைப் பிரிவு, 4 பொறியியல் படைப் பிரிவு.

யுத்த கவச வாகனங்கள்: 24 ரி - 55 டாங்கிகள் 18 சலாடின், 15 பெரட், 6 ஹஸா கவசவாகனம், 20 ரி - 85, 4 ரி-86, 40 பவல், 20 யுனிக்கோன், 16 ஸ்கோலன்ட் கவச ஆளணி ஊர்திகள்.

பீரங்கி: 12 எம்-59 (130 எம் எம்), 10 எம்-56 (105 எம். எம்) 25 பீடிஆர் (88- எம் எம்), 10 எம்-56 (85 எம். எம்), 12 எம்-48 (76 எம். எம்) துப்பாக்கிகள் 243. 7'' (94 எம். எம் 24 எம்-60 பவோஸ் (40 எம். எம்) விமான எதிர்ப்பு பீரங்கிகள்-30 எம் 40 106 எம்.எம்), எம்-60 (82 எம் எம்), பின் உதைப்பற்ற டாங்கி எதிர்ப்புப் பீரங்கி (ஆர். சி. எல்), எம்-43 (120 எம். எம்), 104.2'' (107 எம்.எம்), 12 82 எம். எம் மோட்டார்.

## கடற்படை

ஆளணி: 10,000. பெரிய ரோந்துக் கலம்: 2 ஜெயசேகரா, மோட்டார் கன் போட்: 6 சூயிபா (சீனு), 3 சீனப் படகுகள், அதிவேக ரோந்துப் படகுகள்: 10 டோரா, 2 டாபர், 3 தென் கொரியப் படகுகள், கரை ரோந்துக் கலம்: 30 எம் படகுகள் (உள்ளூர்த் தயாரிப்பு), 14-22 தொன் நிறையான படகுகள், 6 சிறு படகுகள். தரை இறங்கு படகுகள்: 4-எல். சி. எம். ஆணையிடுவதும், ஆதரவளிப்பதுமான கப்பல்கள்: 3 அபீதா ஆர். ஓ—ஆர். ஓ கப்பல்கள்.

## விமானப் படை

மிக்-21 யு. ரி. ஐ., தரைத் தாக்குதல்: 4 புக்காரா. தீவிரவாதிகளை அடக்கும் விமானங்கள்: 11 எஸ்: எவ்-260 ரி பி போர்க்கும் விமானம், தரைத் தாக்குதல் ஹெலிகொப்டர்கள்: 13 பெல்-212. 40 பெல்-412 (4 மட்டும் இயக்கத்தில்). யுத்த காலத்தில் தேடுதல், காப்பாற்றுதல் அணி: 6 செசனா-337, 2 டாபின் ஹெலிகொப்டர். போக்குவரத்து: 2 வை-8, 2 அவ்ரோ, ஒரு கோல்டன் ஈகிள், ஒரு கப்பர் கிங் எயர், 9 வை-12. ஹெலிகொப்டர்கள்: 3 மிக்-17, இன்னும் 206 வகை. பயிற்சி விமானம்: 2-எவ். ரி. 5 (மிக்-15 யு. ரி. ஐ), 6 செசனா-150, 4 சிப்மங்.

## விசேட அதிரடிப் படை

ஆளணி: 3,000. ஆளணி: யுத்தவிமானம்: 4-எவ்.7 (மிக்-21), எவ்-டி-7 ஒன்று.

# வடக்கே படைக்கு தோல்வி; தெற்கில் கிரிக்கெட் ரசனை

## 'சண்டே ரைம்ஸ்' சீற்றம்

(கொழும்பு)

நாடு பற்றி எரியும்போது நீரோ மன்னன் வீணை இசைத்ததுபோல, வடக்கு கிழக்கில் படையினர் போரில் தோல்வியை தழுவுகிறார்கள் ஆயுதங்களை இழக்கிறார்கள்; போர் தொடர்கிறது ஆனால் தெற்கிலோ யாதும் சிந்தனையற்று கிரிக்கெட் விளையாட்டில் ரசனையை செலுத்துகிறார்கள் என 'சண்டே ரைம்ஸ்' கண்டனம் வெளியிட்டுள்ளது.

அரசின் தீர்க்கமானதும் நைதீகமானது முடிவு இல்லை. அரசியல் வாதிகளின் சாவும் போக்கு மற்றும் படையின் சொந்த நலன் காணும் நோக்கு இவையாவும் போரில் தோல்விகளை ஈட்டியுள்ளன. இவைபற்றி சிந்தியாது மந்தியில் வெற்றிக்களிப்போடு சிந்தனையற்று செயற்படுகிறார்கள்.

மணிக்கிண்டிமலை இராணுவ முகாம் தோல்வி வெட்கக்கேடான விடயம். பல கோடி ரூபா பாதுகாப்பு செலவும், பல்லாயிரம் உயிர்ப்பலிகளுடனும் தொடர்ந்து இழுபட்டுச் செல்லும் போரும் போருக்கு அரசியல் வாதிகள் ஒரு முடிவு கட்டவேண்டும் எனவும் கருத்தை அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (கே. சி.)

# சீனாவில் வெடிவிபத்து 100 பேர் உயிரிழப்பு

(பீக்கிங்)

சீனாவில் நேற்றுமுன்தினம் வெடி விபத்தொன்றில் 100 பேர் அதே இடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள், 250 பேர் படுகாயமடைந்தார்கள்.

சீனாவில் உள்ள மிகப்பெரிய பட்டாசுகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் இந்தப் பாரிய வெடிவிபத்து ஏற்பட்டது.

தொழிற்சாலையில் உள்ள வெடிமருந்துக் கிடங்குகள் இரண்டை தொழிலாளர்கள் திறக்க முற்பட்டபோது எதிர்பாராதவிதமாக இவ்விபத்து ஏற்பட்டதாகவும், இவ்விபத்தில் பலியானவர்களிலும், படுகாயமடைந்தவர்களிலும் பெண்களே கூடுதலாக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. —வி

## பதவி வெற்றிடம்

ஆங்கில மருந்து வாணிபத்தில் அனுபவம் உடையவர்களிடமிருந்து விற்பனையாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகமைகள்:

க. பொ. த (சா/த) வில் சித்தியும் ஆகக் குறைந்தது இப்பதவிகளில் ஏதாவதொன்றில் மூன்று வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையோர்

10-08-93 காலை 9-00 மணிக்கு

யாழ்ப்பாணம் (கந்தர்மடத்தில்) பலாலி வீதியில் அமைந்துள்ள

வருவாய்ப்பகுதிச் செயலகத்திற்கு

உரிய சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

(ஏ 3382

# நூலகவியல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

1990ம் ஆண்டு இலங்கை நூலகவியல் சங்கத்தில் நூலகவியல் சான்றிதழ் நெறிக்குப் பதிவுசெய்த மாணவர்களின் பரீட்சை சம்பந்தமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (கி)

# ஒளி வீச்சு ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம் நிறுவனத்தினர்' மாதந்தோறும் வெளியிட்டுவரும் ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையின் ஆய்வரங்கு நிதர்சனம் ஒலி ஒளி கொக்கு (4ம் பக்கம் பார்க்க)

# இராசிபலன்

07-08-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு ஆடி 23)

பஞ்சமி பி. இ. 2-01 வரை, உத்தரட்டாதி பி. ப. 5-01 வரை, இராகுகாலம் காலை 9-04 முதல் 10-34 வரை, சுபநேரம் மாலை 3-04 முதல் 4-34 வரை, சித்தயோகம்.

மேஷம்: எதிரிகள் வன்மம், நீசர் நட்பு, பணமுடை.

இடபம்: மனக்களிப்பு, குறுக்குவழி, குடும்ப நன்மை.

மிதுனம்: பிறர் அனுகூலம், தொழில் சிறப்பு, வாக்கு வன்மை.

கடகம்: சந்தோஷக் குறைவு, தொழில் முடக்கம், சோர்வு.

சிம்மம்: சுதந்திரமற்ற நிலை, மனக்குறை, அலைச்சல்.

கன்னி: காரிய பலிதம், தொழிலாளர் நன்மை, பணம்.

துலாம்: விருந்தோம்பல், சகோதர உபதேசம், தெய்வ தரிசனம்.

விருச்சிகம்: உடம்பில் எரிச்சல், பழைய பகை, மன முடைவு.

தனுசு: மனைவி துன்பம், வீண் செலவு, அமைதியின்மை.

மகரம்: சுயநல போக்கு, நண்பர் வருகை, தொழில் லாபம்.

கும்பம்: ஏமாற்றப்படல், கால்மூட்டுவலி, பயனற்ற சொல்.

மீனம்: அஞ்ஞானம், வேண்டாத உறவு, புகழ்

ஜோஸ்யர்

# இந்திய புலனாய்வு குழு இலங்கை வந்தது

(கொழும்பு)

தமிழ்நாட்டிலிருந்து பெருந்தொகையான போதைப் பொருட்கள் இலங்கைக்குக் கடத்தப்பட்டது சம்பந்தமாக விசாரணை மேற்கொள்வதற்காக இந்தியாவின் உயர் மட்ட புலனாய்வுக்குழு ஒன்று நேற்று கொழும்பு வந்துள்ளது

தமிழ்நாட்டுக் கடற்கரை பகுதிகளிலிருந்து அண்மைக்காலமாக பலகோடி ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் தென்னிலங்கைக்குள் கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போதைப்பொருள் கடத்தல் சம்பந்தமாக கோடீஸ்வரரான ஒருமுக்கிய வர்த்தகர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (வி)

## ஞாலம் புகழ் நல்லைக் கந்தன்

இராகம்; ஹம்சத்வனி — தாளம்; ஆதி

பல்லவி

ஞாலம் புகழ்நல்லை நாயகனே! சிவன்
பாலகனே! அருள்வேலவனே! குகனே!

அநுபல்லவி

காலபயம் தீர்க்கும் தத்துவனே — உன்
சீலம் படைக்க வெனை வைத்தவனே
(ஞாலம்)

சரணம்

வேதப்பொருள் விளம்பும் வித்தகனே!
வேழமுகத் தவனுக் கிளையவனே!
ஆதியும் அந்தமுமாய் ஆனவனே — என்னை
ஆளும்திரு நல்லைக் கோனவனே
(ஞாலம்)

— நாயன்மார்கட்டு இ. குகதாசன்.

★ இன்று நல்லைக் கந்தன் 15ம் நாள் உற்சவம்.

**மழைநீரை பெருங்கடல் எனதேக்கிடுவார்—தேக்கார் தேசிய நலன் பேணுர்.**

★ போக்குவரத்து ★ குடிநீர்த்தட்டுப்பாடு ★ மருத்துவ வசதி இல்லை

# தீவுப்பகுதி சன நடமாட்டமில்லாத

# சூனிய பிரதேசமாக காட்சியளிக்கிறது

## நேரில் சென்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தகவல்

(கொழும்பு)

மக்கள் நடமாட்டம் இல்லாத ஒரு சூனியப் பிரதேசமாக தீவுப்பகுதி தற்போது காட்சியளிக்கிறது என இவ்வாறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த 16 பிரதிநிதிகள், கடந்த பத்து நாட்களுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தீவகத்துக்கு விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பியதும் பத்திரிகையாளரிடம் தெரிவித்தனர்.

இக்குழுவினர் நயினாதீவு, அனலைதீவு, வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, எழுவைதீவு, காரைதீவு, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தனர்.

இப்பகுதிகளிலுள்ள பெரும்பாலான வீடுகள் அழிந்த நிலையிலேயே காட்சியளிக்கின்றன. பூட்டப்பட்டிருந்த பெரிய வீடுகள் இரவு வேளைகளில் உடைக்கப்பட்டுச் சூறையாடப்பட்டதாக இங்குள்ள வயோதிபர் பலர் தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள்.

இங்குள்ள வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு இளம் வயதினர் எவருமே இல்லாததினால் இவர்கள் இங்கு பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

தீவகத்தில் போக்குவரத்து வசதிகள் எதுவும் கிடையாது. மக்கள் குடிநீரின்றி பெரிதும் துன்பப்படுகிறார்கள். வைத்தியசாலைகளில் மொத்தம் மூன்று வைத்தியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர். காரைதீவு, நெடுந்தீவுப் பகுதிகளில் வைத்தியர்களே இல்லை.

இரவு நேரங்களில் கடற்கரை பிரதேசங்களைச் சுற்றிலும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன. நாம் தென் இந்திய திருச்சபையின் இல்லங்களிலும் இராணுவத்தினர் ஏற்பாடுசெய்து தந்த சில இடிந்த வீடுகளிலுமே தங்கியிருந்தோம். இப்பகுதி மக்கள் போரை முற்றாக வெறுக்கின்றார்கள். அமைதியும் சகஜ நிலையும் ஏற்பட்டு தம்மைப் பிரிந்து வாழும் தமது பிள்ளைகளை — உறவினருடன் மீண்டும் இணைந்து வாழ்வதையே அவர்கள் விரும்புகின்றார்கள் என்றும் எதிர்க்கட்சி பிரதிநிதிகள் தெரிவித்தனர். (வி-ரி)

### ஐ. தே. கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்குமேலும் கூறியதாவது:

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவரைவிட சிறந்த ஒருவர் கிடையாது. நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவும் தேசிய அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லவும் அவரால்தான் முடியும் என்றார். (இ)

### எதிர்வரும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் 250 எம் பிக்களில் 125 எம் பிக்கள் நேரடி தொகுதி ரீதியில் நடைபெறும் தேர்தல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்கள். ஏனைய 125 எம் பிக்களும் ஒவ்வொரு கட்சிக்கும் தேர்தல் தொகுதி அடிப்படையில் கிடைக்கும் வாக்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்.

அரசியலமைப்பின் புதிய திருத்தத்தின்படி வாக்காளர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவுசெய்தபின்னர் அவரது தெரிவு நாடாளுமன்றத்தின் அதிகப்படியான வாக்குகளால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இதன்படி ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு சகல விதத்திலும் பதில்சொல்லக் கூடிய ஒரு ஜனாதிபதியாகவே இருப்பார். (இ)

## ஐ. தே. க. எதிர்ப்பு போர் மக்கள் நடத்த வேண்டும்

### - சந்திரிகா

(கொழும்பு)

'கடந்த 15 வருட காலமாக மக்கள் கொலைகார ஆட்சியில் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் கொலைகார கும்பல்கள் இன்னும் அழியவில்லை' இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

தென்பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் இனி அநியாயங்கள் நடக்காது என எண்ணிவிடக்கூடாது. ஐ. தே கட்சி எதிர்ப்புப் போராட்டத்தை மக்கள் கொண்டு நடத்த வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ரி

### கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் வர்த்தகர் சங்கம் நடாத்தும் கலை நிகழ்ச்சி இன்று மாலை 4 00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாதஸ்வரஇசை, பரதநாட்டியம், ஜி. சாந்தன், ராஜஸ்வ் குழுவினரின் இன்னிசைகானங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (கி)

### 5000 பரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது கடந்த ஜனவரியில் 245 பரல்களும், பெப்ரவரியில் 135 பரல்களும் மார்ச் 2885 பரல்களும், ஏப்பிரல் 4012 பரல்களும், மே 800 பரல்களும், ஜூன் 1988 பரல்களும், ஜூலை 2121 பரல்களும் சிறிலங்கா அரசால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதென அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது. -ரி

### நிபந்தனை

(4ம் பக்கம் பார்க்க)

ஆஸ்திரியாவில் அண்மையில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னரே இவ் அமைப்பு தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பத்திரிகை அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. இலங்கையில் சிங்களப் படையினரால் தமிழ் மக்கள் கொல்லப் படுவதையும், சிங்களக் குடியேற்றங்களையும் கடுமையாக கண்டித்து இவ்அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (கி)

### அரச அதிபர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் வேண்டுகோளின்படி தாம் உண்ணாவிரதத்தைக் கைவிடாது அவரது வேண்டுகோளுக்கு மரியாதை அளிக்கும் முகமாக நீராகாரம் அருந்தி உண்ணாவிரதத்தைத் தொடர்வதாகவும் பாதுகாப்பு அமைச்சு தம்மை விடுவிக்கும் எனத் தாம் நம்புவதாகவும் யுத்தக் கைதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். அரச அதிபர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார். இருந்தும் யுத்தக் கைதிகள் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர். (பு)

### 9 அகதிமுகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. சிங்களவர்களதும் முஸ்லிம்களதும் பலத்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இவர்கள் வாழவேண்டியவர்களாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (கி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

'நல்லைக் குமரன் மலர்' வெளியீட்டு விழா, மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு. நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ நீலகண்டபாபாவின் 59வது ஜயந்தி தினம், இன்று சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கும், அத்வைத வேதாந்தச் சொற்பொழிவு நாளை ஞாயிறுக்கிழமை காலை 9 00 மணிக்கும் உடுவில்-கிழக்கு, கடவுள் சந்நிதியில் வைத்திய கலாநிதி வ. சின்னப்பு தலைமையில் நடைபெறும். (இ)

0 0 0

(கொழும்புத்துறை)

மருதனார்மடம் கோட்ட இசை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று 7ம் திகதி சனிக்கிழமை சங்கீத பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு சு. கணபதிப்பிள்ளையின் தலைமையில் இடம்பெறும். -154

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக கேட்போர் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு ஜனசவிய திட்டம் பற்றிய கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட பிரதி ஆணையாளர், சகல பிரதி ஆணையாளர், சகல பிரிவுச் செயலர்கள், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், சகல உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ் செயலகம் கேட்டுள்ளது. (162)

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். நாயன்மார்க்கட்டு சனசமூக நிலையத்தில் மாதாந்த அறிவியலரங்கு தொடர் 14 இன்று 7ம் திகதி சனிக்கிழமை மாலை 6 30 மணிக்கு நிலையத் தலைவர் திரு. இ. அரசகுலசூரியன் தலைமையில் நடைபெறும். (154)

## சத்திர சிகிச்சையின்போது இறந்த ஆனைக்கோட்டை இளைஞர் விபத்துமரணமென தீர்ப்பு!

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சத்திர சிகிச்சையின் போது மரணமான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பிரான்ஸிஸ் செல்வநாதன் (வயது 3.) என்பவரின் மரணம் ஒரு திடீர் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

காலஞ்சென்றவரைச் சத்திர சிகிச்சை செய்த வைத்திய நிபுணர் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மேற்படி நோயாளியை ஜூலை மாதம் 30-ம் திகதி காலை 8 மணிக்கு இருதய வீக்கம் காரணமாகச் சத்திரசிகிச்சை செய்தேன்.

சத்திர சிகிச்சையின் போது கத்தி பிடியிலிருந்து கழன்றிருந்தது தொலைவந்தது கத்தியைத் தேடிப்பார்த்தேன் பலனளிக்கவில்லை. நோயாளியை 'எக்ஸ்ரே' எடுத்த போது அவரது உடலில் கத்தி இருப்பது தெரிந்தது.

இரண்டு தினங்களின் பின்பு மீண்டும் சத்திரசிகிச்சை செய்தேன் அவ்வேளை நோயாளி மரணமானார்" என டாக்டர் கூறினார்.

காலஞ்சென்ற நோயாளியின் மனைவி செல்வநாதன் சரோஜாதேவி (வயது - 24) யும் சாட்சியமளித்துள்ளார். வி-ரி)

## ஊழியர் சேமலாபநிதி மோசடி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஊழியர்கள் தமது சேமலாபநிதியைப் பெறுவதில் பல மோசடிகளை செய்திருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் பல ஊழியர்கள் போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்து தமது சேமலாபநிதியைப் பெற்றுள்ளது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 4 மாதங்களில் 300க்கும் அதிகமான ஊழியர்கள் பலகுறுக்கு வழிகளில் தமது சேமலாப பணத்தை பெற்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. —வி-ரி

### ஒளிவிச்சு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்வாய்வரங்கில் இலக்கியவாதிகள், கலைஞர்கள், படைப்பாளிகள் கலந்து கொண்டு தமது கருத்துரைகளை வழங்கினார்கள். (கி)

### யாழ்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரிடம் கோரியுள்ளது.

யாழ்மாவட்டத்தின் உணவு சுகாதாரம், போக்குவரத்து என்பனவற்றின் தற்போதைய நிலை பற்றியும் மாவட்டதில் மேற்கொள்ளப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள் தேவைகள் பற்றிய விபரமான அறிக்கை ஒன்றை உடன் தயாரித்து அனுப்பிவைக்கும் படி ஜனாதிபதி செயலகம் அனுப்பிய கடிதத்தில் மேலும் கோரியுள்ளது. (ஸ்ரீ

### மாவீரர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கந்தண்ணா இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து இரு சமூகக் கூடங்களையும் திறந்து வைக்கவுள்ளார்.

சரசாலையில் மாவீரர் சேரமன் ஞாபகார்த்தமாகவும், கெருடாவிலில் மாவீரர் ஸ்டாலின் நினைவாகவும் இச் சமூக கூடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. (கி

### பம்பலப்பிட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுப் பணியகத்துப்பற்றியும் பொலிசார் தற்போது கைது செய்துள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் பிரபல வேடிக்கள் என்றும் ஒருவர் மேற்படி கோவில் திருவிழாவுக்கான கோவில் வளவில் இயங்கிவந்த 'மெறிகோறவுண்டின்' உரிமையாளர் என்றும் பொலிசார் தெரிவித்தனர். (வி-ரி)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜூலையில் தங்கியிருந்த பல வடபகுதி தமிழ் இளைஞர்கள் பேலியாகொடை பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களின் பெயர் விபரம் வருமாறு:

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நவரத்தினசிங்கம் மோகனசிங்கம், தர்மலிங்கம் அருணகிரிநாதன், யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த சிவராசா தேவானந்தன், கொக்குவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் உதயகுமார், நயினாதீவைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிவகுமார், திருநெல்வேலியைச் சேர்ந்த குமாரசிங்கம் ராஜேந்திரன். —வி-ரி

### நாடாளுமன்றத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஒருநாள் நாடாளுமன்றம் விவாதத்துக்காக ஒதுக்கினால் ஒவ்வொரு கட்சியினதும், உறுப்பினர்களினதும் உண்மையான நிலைப்பாட்டை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும் என்று மேற்படி தமிழ் எம். பிக்கள் சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார்கள். —வி-ரி

## தையல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பருத்தித்துறைப் பிரிவு நடாத்தும் 1993 யூலை - டிசம்பர் வரைக்கான தையல் பயிற்சி பருத்தித்துறைப் பிரிவுக் காரியாலயத்தில் (இ. போ. சபைக்கு முன்பாக) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் இதாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post folee, Sri Lanka under Licence Number B/10336/B